**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 16/2024**
**Prosecution Witness - PW1**

| | |
|---|---|
| Name | : ரேணுகா |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.06.2026.
(A1 A4 A6 and A7 are present. A2 and A3 are absent. Petition U/s.355 BNSS are filed and allowed).
**முதல் விசாரணை–**

நான் தேங்காய் பட்டினம் பணங்கால் முக்கில் வசிக்கிறேன். நான் எரும்புக்காடு ஊரில் உள்ள Fishnet நிறுவனத்தில் அக்கவுண்ட் ஆக பணியாற்றுகிறேன்.நாங்கள் எப்போதும் வேலைக்கு 08.30– 08.45 குள் என் பிள்ளைகளை அம்மா வீட்டில் விட்டுவிட்டு வேலைக்கு புறப்படுவேன். 21.5.2022 அன்று 8.45 அளவில் என் அம்மா வீட்டில் பிள்ளையை வீட்டில் விட்டுவிட்டு வேலைக்கு கிளம்பினேன். நானும் என் கணவரும் இரு சக்கர வாகனத்தில்புறப்பட்டோம். TN 75 Y 8166 புறப்பட்டோம்.நாங்கள் மேற்கோடு சுடலைமாடன் கோயில் எதிரில் சென்று கொண்டிருக்கும்போது இரண்டு இரு சக்கர வாகனங்களில் தலா நான்கு பேர்கள் எங்கள் வாகனத்தை முந்தி சென்றார்கள். முன்னாள் அமர்ந்திருந்த இரண்டு நபர்களும் தலைக்கவசம் அணிந்திருந்தார்கள் பின்பகுதியில் இருந்தவர் மாஸ்க் அணிந்திருந்தார்.எங்கள் வாகனத்தை முந்தி செல்லும் பொழுது கெட்ட வார்த்தைகளால் திட்டி எங்கள் வாகனத்தை உதைத்தார்கள். அப்போது நானும் என் கணவரும் கீழே விழுந்து விட்டோம். யூனிகான் வாகனத்திலும் ஸ்பிலண்டர் வாகனத்திலும் வந்தார்கள். ஸ்ப்லெண்டர் வாகனத்தில் வந்தவர்களில் பின்னால் அமர்ந்திருந்தவர் இரும்பு கம்பியை வைத்து நாங்கள் கீழே விழுந்த போது எனது தலையில் அடிக்க வந்தார் அப்பொழுது எனது கணவர் வலது கையை வைத்து தடுக்கும் பொழுது அவருக்கு வலது கையிலும் வலது காலிலும் அடித்தார்கள் அதன் பிறகு அவருக்கு மற்ற இடங்களில் எல்லாம் அடித்தார்கள்ஆட்கள் எல்லாம் வருவதற்கு முன்பே நன்றாக அடித்து விட்டு என் கணவர் எலும்ப முடியாத நிலையில் மயங்கி விட்டார் ஆட்கள் வரும் நேரத்தில் அடித்தவர்கள் அங்கிருந்து கிளம்பி சென்றார்கள் யூனிகான் பைக் கருங்கல் பக்கம் சென்று விட்டது பெண்

ஸ்ப்ளெண்டர் வாகனம் Monday Market பக்கம் சென்று விட்டது. வாகனத்தின் முன்னாள் அமர்ந்திருந்த இரண்டு நபர்களும் இறங்கவில்லை.நான் எனது கணவரை திரவியம் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்துச் சென்றேன். மருத்துவமனையில் மூன்று நாட்கள் உள்நோயாளியாக வலது கால் வலது கை முறிந்து விட்டதால் சிகிச்சை எடுத்துவிட்டு நான்காவது நாள் வீட்டுக்கு சென்று விட்டோம் ஆனால் அவரால் மூன்று மாதங்கள் எழும்ப முடியாத நிலையில் வீட்டிலிருந்தார்.அடிபட்ட அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். மருத்துவமனைக்கு போலீஸ் விசாரிக்க வந்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் அன்று இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள்.யார் யார் எந்த பைக்குகள் ஓட்டினார்கள் என்று சொல்ல முடியுமா என்றால் அவர்கள் ஹெல்மெட் அணிந்து இருந்ததால் அவர்களுடைய கை, கால் உடம்பு வாகுகளை பார்த்து தான் நான் சொல்கிறேன்.கணவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் பொழுதே இரண்டு நபர்களை பிடித்து விட்டதாக போலீஸ் போட்டோ காண்பித்தார்கள் அதன் பிறகு இரண்டு பேர்களை பிடித்து விட்டதாக போட்டோ காண்பித்தார்கள். போலீஸ் என்னை விசாரித்தார்கள். இரண்டு நாட்கள் விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் தான் கொடுத்தேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.இருசக்கர வாகனங்களின் எண்களைப் பார்த்தேனா என்றால் ஸ்ப்ளெண்டர் வாகனத்தின் நம்பர் 5623 என்ற எண் மட்டும் தான் தெரியும் மற்ற எண்ணை பார்க்க முடியவில்லை அடிபட்டதால் .

எதிரிகள் 1 முதல் 4 வரை குறுக்கு விசாரணை

நான் B.A. பொருளியல் படித்திருக்கிறேன். நான் பிசினட் கம்பெனியில் எந்த வருடம் முதல் பணியாற்றுகிறேன் என்றால் 2024 முதல் தற்பொழுது வரை பணியாற்றுகிறேன். மீண்டும் சாட்சி 2004 இல் இருந்து 11 வருடங்களாக பணியாற்றுகிறேன் என்று கூறுகிறார். நான் எத்தனை வருடங்கள் அங்கு வேலை பார்த்தேன் என்று சொல்ல இயலாது என்றால் ஆமாம். நான் 21.5.2022 அன்று நான் முதல்நிலை சாட்சியத்தில் சொன்னவாறு மேற்க்கோடு சுடலை மாடன் கோயில் அருகே என் கணவருடன் எங்களுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் இருசக்கர வாகனத்தில் கணவருடன் தான் சென்றேன் .நான் காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்த புகாரில் இருசக்கர வாகனத்தில் முன்பு இருந்த இரண்டு நபர்கள் தலைக்கவசம் அணிந்திருந்தார்கள் என்றும் பின்னால் அமர்ந்திருந்த நபர்கள் முக கவசம் அணிந்திருந்தார்கள் என்றும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் புகாரில்

எழுதிக் கொடுக்கவில்லை.சம்பவ தேதி அன்று போலீஸ் விசாரணையிலும் அதன் பிறகு இரண்டு நாட்கள் என்னை விசாரித்தார்கள் என்ற சொன்ன தேதிகளிலும் ஸ்ப்ளெண்டர் வாகனத்தில் பின்னால் இருந்த நபர்கள் இரும்பு கம்பியை கொண்டு என் கணவரை அடித்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லி இருக்கிறேன். ஆஜர் எதிரிகள் ஸ்ப்ளெண்டர் வாகனத்தில் முன்னாள் யார் இருந்தார்கள் என்றும் பின் யார் அமர்ந்திருந்தார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சொல்ல முடியும்.ஆஜர் எதிரிகளில் யார் அடித்தது என்று எதிரிகளை காண்பித்து கேட்டால் நீதிமன்றத்தில் சிவப்பு நிற பனியன் அணிந்திருந்த நபர் என்று அடையாளம் காட்டினார் அவர் பெயர் என்ன என்று நீதிமன்றம் கேட்டதற்கு எதிரி தனது பெயர் முசமில் என்று கூறுகிறார்.யூனிகான் இருசக்கர வாகனத்தில் ஓட்டி வந்த நபர் யார் என்று ஆஜர் எதிரிகளை காண்பித்து கேட்டால் சாகுல் ஹமீது என்பவர் ஓட்டி வந்தார் பின் அமர்ந்திருந்த நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை என்று கூறுகிறார்.21.5.2022 அன்று சாகுல் ஹமீது வாகனம் எதுவும் ஓட்டவில்லை என்றால் சரியல்ல அவர்தான் ஓட்டினார். 4வது எதிரி முஸம்மில் 21.5.2022 அன்று ஸ்ப்ளெண்டர் வாகனத்தில் பயணிக்கவில்லை என்றால் சரியல்ல அவர் பயணித்தார்.சம்பவத்தன்று எனது கணவர் சென்ற வாகனத்தை காலில் உதைத்தார் என்று புகாரிலோ அல்லது போலீஸ் விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்றால் சொல்லி இருக்கிறேன்.திங்கள் சந்தை கருங்கல் சாலையில் அமைந்துள்ள சுடலைமாடன் கோவில் எந்த திசையில் அமைந்திருக்கிறது என்றால் திசை எனக்கு தெரியவில்லை.கருங்கலில் இருந்து திங்கள் சந்தை செல்லும் சாலை கருங்கலில் இருந்து எந்த திசையில் செல்கிறது என்றால் எனக்கு திசை தெரியவில்லை.நான் கீழே விழுந்து தலையில் காயம் பட்டது என்பதையும் எதிரிகள் தாக்கியதால் தான் காயம் ஏற்பட்டது என்பதையும் புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சொல்லி இருக்கிறேன். சம்பவம் நடந்த அன்று 21.5.2022 அன்றும் அதன் பிறகு 28.5.2022 அன்றும் காவல் நிலையத்திற்கு நான் சென்றேன்.28.5.2022 அன்று நான் காவல் நிலையத்திற்கு சென்றதை காண்பிக்க எந்த ஆவணமும் இங்கு இல்லை என்றால் ஆமாம் நான் முதல்

தகவல் அறிக்கை நகல் வாங்கி சென்றேன் அப்பொழுது தகவல் சொன்னார்கள்.இரண்டு எதிரிகளை கைது செய்து என்னிடம் புகைப்படத்தை காண்பித்தார்கள் என்றும் அதை நான் பார்த்தேன் என்ற விபரமும் என்னுடைய வாக்குமூலத்தில் இல்லை என்றால் ஆமாம். என்னுடைய கணவரை தாக்கிய நபர்கள் தலைக்கவசம் அணிந்திருந்ததாலும் முக கவசம் அணிந்திருந்ததாலும் அவர்கள் யார் என்று என்னால் கூற இயலாது என்றால் சரியல்ல கூற இயலும்.எனக்கு பின்னால் காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றேன் என்பதை காண்பிப்பதற்கு நான் மருத்துவமனையில் விடுவிப்பு சான்றிதழ் மற்றும் காயச் சான்றிதழ் பெற்றேனா என்றால் வாங்கினேன் போலீஸ் வாங்கினார்களா என்றால் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் எதிரிகள் என் கணவரை தாக்குவதற்கு எவ்வளவு நேரங்கள் பயன்படுத்தினார்கள் என்றால் ஐந்து நிமிடங்கள். சாட்சி பட்டியலில் உள்ள மோனிசும் அஜின் என்பவரும் தேங்காய் பட்டினத்தில் அருகில் எங்க வீட்டுக்கு பக்கத்தில் உள்ள நபர்கள் என்றால் ஆமாம். அவர்களுக்கும் என் கணவருக்கும் பல ஆண்டுகளாக பழக்கம் உண்டு என்றால் ஆமாம். என் கணவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பொழுது நிறைய பேர் பார்க்க வந்தார்கள் எத்தனை பேர் பார்க்க வந்தார்கள் என்றால் எத்தனை பேர் என்று என்னால் கூற இயலாது பத்து பேர் வந்திருப்பார்களா என்றால் இருக்கும் சம்பவம் நடந்த கருங்கல் முதல் திங்கள் சந்தை செல்லும் சாலை மாநில நெடுஞ்சாலை என்றால் ஆமாம். அந்த சாலை பள்ளிக்கூடம் கல்லூரி வாகனங்கள் எல்லாம் அதிகம் செல்ல கூடிய சாலை என்பதால் சம்பவ நேரத்தில் அதிக போக்குவரத்து இருந்தது என்றால் ஆமாம். மேற்கொடு சுடலைமாடன் கோவில் அருகே உள்ள சாலையில் அதிலிருந்து 150 மீட்டர் தூரத்தில் செல்லுகின்ற சாலை வளைவான சாலை என்றால் ஆமாம்.அந்த சாலை வளைவான சாலை என்பதால் இருசக்கர வாகனத்தை ஓட்டுபவர்கள் அந்த இடத்தில் மெதுவாக பயணிப்பார்கள் என்றால் ஆமாம்.கருங்கல் திங்கள் சந்தை சாலை பேருந்துகள் அதிகம் வருவதால் என் கணவர் இருசக்கர வாகனத்தில் இருந்து வலது பக்கம் விழுந்துவிட்டார் என்றால் இல்லை.எனக்கும் என் கணவருக்கும் ஏற்பட்ட காயம் இருசக்கர வாகனத்தில் இருந்து தானாக விழுந்ததால் ஏற்பட்ட காயம் என்றாலும் எனக்கு அல்லது என் கணவருக்கோ

ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரி இல்லை.நான் காவல் நிலையத்திற்கு இரண்டு முறை சென்ற போதும் இரும்பு கம்பியை பார்க்கவில்லை என்றால் ஆமாம். மேக்கோடு சுடலைமாடன் கோவில் அருகே சாலை ஓரத்தில் நிறைய வீடுகள் உள்ள பகுதி என்றால் ஆமாம். எனது பெரியப்பா குமாரதாஸ் என்பவர் மகன் ரதிஸ் என்பவர் மீது புதுக்கடை காவல் நிலையத்தில் குற்ற எண் 145/22 வழக்கு பதியப்பட்டு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் இந்து சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம் என் கணவர் அச்சமுதாயம் தொடர்பான ஏதாவது கட்சியில் இருந்தாரா என்றால் இல்லை.என் கணவரின் நண்பர்கள் கொடுத்த தவறான ஆலோசனை அடிப்படையில் தவறான வழக்கை தொடுத்து நடக்காத சம்பதை வைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை .ஆஜர் நான்காவது எதிரிக்கும் என் கணவரை தாக்கியதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இல்லை.

<u>எதிரிகள் 6 மற்றும் 7 வது தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்தபோது போலீஸ் என்னை விசாரித்தார்கள் என்று சொன்னதற்கு எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் 10 மணியிலிருந்து மாலை வரை விசாரித்துக் கொண்டுதான் இருந்தார்கள் .நான் முதல் தகவல் அறிக்கை பெற்றுக் கொள்வதற்காக காவல் நிலையம் சென்றேன் என்று சொல்வதற்கு அப்பொழுது காவல் நிலையத்தில் ஏதாவது கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை நான் கையெழுத்து போடவில்லை.புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் திரவியம் மருத்துவமனையில் வைத்து எழுதப்பட்டது. புகார் எழுதும் பொழுது என் வீட்டுக்காரர் உடன் இருந்தாரா என்றால் அவர் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தார் என் அம்மா இருந்தார் உடன் போலீஸ் இருந்தார்கள் எத்தனை போலீஸ் இருந்தார்கள் என்றால் இரண்டு போலீஸ் இருந்தார்கள்.நான் புகாரியில் எனக்கு அடிபட்டதாக எழுதிக் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். இரண்டு இரு சக்கர வாகனத்தில் நிறங்கள் நான் சொல்லவில்லை என்றால் ஆமாம்.நான் எந்த தேதியில் சிகிச்சை எடுத்தேன் என்றால் 22.5.2022ல் சிகிச்சை எடுத்தேன். காவல் நிலையத்தில் வைத்து புகைப்படம் காண்பித்தார்கள் என்று சொல்வதற்கு எத்தனை புகைப்படம்

காண்பித்தார்கள் என்றால் இரண்டு புகைப்படங்கள் காண்பித்தார்கள். அந்த இரண்டு புகைப்படங்களில் உள்ள நபர்கள் ஆஜர் எதிரிகளா என்றால் இல்லை. போலீஸ் என்னை விசாரிக்கும் பொழுது யாரையாவது நிற்க வைத்து அடையாளம் காட்டினார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த அன்று காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் மாலை 4 மணிக்கு சென்றேன். நான் காவல் நிலையம் செல்லும் பொழுது புகைப்படங்கள் காண்பித்தார்களா என்றால் மொபைலில் காண்பித்தார்கள்.அந்த புகைப்படங்களில் உள்ள நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாக போலீஸ் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். எதிரி சாகுல் என்பவரது பெயர் எப்போது எனக்கு தெரியும் என்றால் சம்பவம் நடந்து இரண்டு மாதங்கள் கழித்து தான் தெரியும். ஆஜர் எதிரிகளை சம்பவம் நடப்பதற்கு முன்பாக ஏற்கனவே நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. சம்பவத்திற்கு பிறகு எதிரிகளை எங்கே பார்த்தேன் என்றால் புகைப்படத்தில் பார்த்தேன் தற்பொழுது தான் நேரில் பார்க்கிறேன். நான் ஏற்கனவே புகைப்படத்தில் காண்பித்த இரண்டு நபர்களும் தற்பொழுது நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை என்று சொல்லி இருப்பதால் ஆஜர் எதிரிகளை எப்பொழுது பார்த்தேன் என்றால் தற்பொழுது தான் பார்க்கிறேன். என் கணவர் எந்த வழக்கிலும் புகார்தாரர் இல்லை என்றாலும் அதே போல் அவர் மீது எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் ஆமாம்.

ஆஜர் ஆறாவது எதிரி சாகுல் ஹமீது சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இல்லை. என் கணவருக்காக போலீஸ் சொன்னதுப்படி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**